2002 ஏப்ரல் 23]

(ஆ) பேரவைப் பணிகளினின்றும் திரு. பரிதி இளம்வழுதி மற்றும் டாக்டர் க. பொன்முடி ஆகியோரை ஒரு நாள் மட்டும் நீக்கி வைத்தல்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்காகவும், தவறு செய்பவர்களுக்கு, திருந்துவதற்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற அடிப்படையிலும் தாங்கள் தங்களுடைய தீர்ப்பை மறுபரிசீலனை செய்து, இன்று வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள், இன்று கூட்டத் தொடர் முடியும் வரை கலந்துகொள்ளக் கூடாது என்ற அளவில் தங்கள் தீர்ப்பைத் தாங்கள் மாற்றிக்கொண்டு, நாளை மீண்டும் இந்த அவையின் நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அவர்களைத் தாங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மீண்டும் அவர்கள் இதேபோல நடந்துகொண்டு ஆபாசமாகப் பேசினால், அப்போது தாங்கள், எஞ்சிய கூட்டத் தொடர் முடியும் வரை அவர்களை வெளியேற்ற வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர் பெருமக்கள் எல்லோரும் சொன்ன அந்தக் கருத்தையொட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்தையொட்டி—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். மன்னிக்கக்கூடிய விசாலமான இதயம் எங்கள் அனைவருக்குமே இருக்கிறது. எங்கள் புரட்சித் தலைவர் அண்ணன் எம்.ஜி.ஆர். அவர்கள் எங்களை அப்படித்தான் வளர்த்தார்கள். எங்களுக்குக் கற்றுக் கொடுக்கிற புரட்சித் தலைவி அவர்களும் எங்களுக்கு அப்படித்தான் கற்றுக் கொடுக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) “கடிதோச்சி மெல்ல எறிக” என்பதுதான் நாங்கள் பின்பற்றக்கூடிய நெறி. முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். இன்றைக்கு மட்டும் அவர்கள் கூட்டத்திலே கலந்துகொள்வதை நான் நீக்கி வைக்கிறேன். ‘எஞ்சிய கூட்டத் தொடர் முழுவதும்’ என்பதை நான் மாற்றுகிறேன். பேரவை முன்னவர் அவர்கள் தீர்மானம் கொண்டுவரக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. சி. பொன்னையன்] [2002 ஏப்ரல் 23

"விதி 121(2) proviso அடிப்படையில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு பரிதி இளம்வழுதி அவர்களையும், மாண்புமிகு பொன்முடி அவர்களையும் இக்கூட்டத் தொடரின் எஞ்சிய காலம் வரை அவைக்கு வரக்கூடாது" என்று அளித்த தீர்ப்பை மறுபரிசீலனை செய்து, இன்று மட்டும் அவர்கள் அவையிலிருந்து நீக்கி வைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறிய ஆலோசனைக்கு ஏற்ப, இன்று மட்டும் அவர்களை அவையிலிருந்து நீக்கி வைக்க வேண்டும்." என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

உறுப்பினர்கள் திரு. க. பொன்முடி மற்றும் திரு. பரிதி இளம்வழுதி, இன்று மட்டும் பேரவைப் பணிகளிலிருந்து தற்காலிக நீக்கம் செய்யப்படுகிறார்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களும், பத்திரிகையாளர்களும் கடந்த 5 ஆண்டு காலம் நடந்த அராஜக தி.மு.க. ஆட்சிக்கும், இப்போது ஜனநாயக நெறிமுறைகளைக் கட்டிக் காக்கின்ற இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) உள்ள வேறுபாட்டை உணர்ந்து, இப்போதாவது ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS